Tamil Nadu Graduate Teachers' Association.

* 85 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) the number of teachers in the Districts of Madurai and Ramanathapuram, who have not, so far, benefited by G.O. Ms. No. 463, Education Department, dated 23rd March 1973, regulating the period of suspension of those teachers, who participated in the agitation organised by the Tamil Nadu Graduate Teachers' Association; and

(b) the reasons therefor?

தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம்

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாடு பட்டதாரி ஆசிரியர்கள் சங்கத்தால் நடத்தப்பட்ட போராட்டத்தில் கலந்துகொண்ட ஆசிரியர்களைத் தற்காலிகமாக பணியிலிருந்து நிறுத்திவைத்த கால அளவை முறைப்படுத்துவது குறித்த கல்வித் துறையின் மார்ச் 23, 1973 ஆம் நாளிட்ட 463 ஆம் எண் அரசு ஆணையால் இதுவரை பயனடையாத மதுரை, இராமநாதபுரம் மாவட்ட ஆசிரியர்கள் எத்தனை பேர்?

(இ) அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஒன்றுமில்லை.

(இ) கேள்வி எழாது.

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, பல்வேறு ஆசிரியர்கள் இந்தச் சலுகையை அனுபவிக்காத நிலைமையில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அரசு சலுகையை அளித்தும், சில பள்ளிகளில் அந்தச் சலுகைகள் வழங்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? எனவே உடனே ஆணை பிறப்பித்து, அந்த ஆசிரியர்களுக்கு அந்தச் சலுகைகளை வழங்க அரசு முன்வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவரவர்களே, பள்ளிக் கல்வி இயக்குநரிடமிருந்து கிடைத்துள்ள தகவல், அப்படிப்பட்ட ஆசிரியர்கள் இல்லையென்பதுதான். மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று யாராவது பாதிக்கப்பட்டிருந்தால், அதைப்பற்றி கவனத்திற்குக் கொண்டுவந்தால், நடவடிக்கை எடுக்கலாம்.

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. பி. ஆர். தாமஸ் : முகவை மாவட்டத்தில், சாத்தூர் வட்டாரத்தில் ஆசிரியர்கள் பணிக்கு வராத முன்பு, திருவிழாவிற்காக விடுமுறை அளித்திருக்கிறார்கள். அந்த விடுமுறையைத் தொடர்ந்து பணிக்கு வராதவர்களுக்கு, விடுமுறைக் காலத்தையும் சேர்த்துக்கொண்டு ஊதியம் அளிக்காமல் இருந்திருக்கிறார்கள். ஆகவே, அந்த விடுமுறைக் காலத்தைக் கணக்கில் எடுத்துக் கொண்டு சம்பளம் கொடுக்க அரசு முன்வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதைப்பற்றித் தனியாகக் கவனத்திற்குக் கொண்டு வந்தால், நடவடிக்கை எடுக்கலாம்.

Rules relating to take over of Municipal Schools.

* 86. *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether it is a fact that due to the delay in the framing of the rules relating to the take over of the Municipal Schools, the teachers are put to much hardship in receiving their salaries, getting due increments, depositing Provident Fund contributions, getting loans from Provident Fund accounts, etc.; and

(*b*) if so, the action taken thereon?

நகராட்சிப் பள்ளிகளை அரசு எடுத்துக்கொள்வது சம்பந்தமான விதிகள்

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) நகராட்சிப் பள்ளிகளை அரசு எடுத்துக்கொள்வது சம்பந்தமான விதிகளைச் செய்வதிலுள்ள கால தாமதத்தினால், ஆசிரியர்கள், தங்களது சம்பளம், ஊதிய உயர்வு ஆகியவற்றைப் பெறுதல், வருங்கால வைப்பு நிதிக்குத் தொகை செலுத்துதல், அதனின்று கடன் பெறுதல் முதலியவற்றில் மிகுந்த இடர்பாடுகளுக்குள்ளாகிறார்கள் என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. ஆர். தாமஸ் : துணைத் தலைவரவர்களே, விதிமுறைகள் வகுக்கப்படுவதற்கு முன்னரே, சில நகராட்சிப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர் பதவிகள் நகராட்சிப் பள்ளி ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படாமல், 'ஏ' பிரிவு